# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2493/21 - 2026 ජූනි මස 17 වැනි බදාදා - 2026.06.17**

*2493/21 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**கிழக்கு மாகாண சபை அறிவித்தல்**

1989 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க மாகாண சபைகள் (இடை நேர்விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும், 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் தத்துவங்களை கையளித்தல்

**தத்துவங்கள் கையளிப்பு**

1989 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க மாகாண சபைகள் (இடை நேர்விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும், 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார வரம்பிலுட்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர ஆகிய நான், கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கும் உதவுவதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் இதன் கீழ் உள்ள அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொருவருக்கும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும், 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தினாலும் அச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளினாலும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கும் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களில் அட்டவணையின் III ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள தத்துவங்களை தற்போதுள்ள அவர்தம் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசத்தினுள் அவ் அட்டவணையின் II ஆம் நிரலில் குறிப்பிட்டிருக்கும் திகதியில் இருந்து பிரயோகிக்க இக்கட்டளை மூலம் கையளிக்கின்றேன்.

**ஜயந்த லால் ரத்னசேகர,**
ஆளுநர்,
கிழக்கு மாகாணம்.

திருகோணமலை
2026.06.11


1A - G 47055 — 04 (2026/06)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| 1. களுத்தர ஆச்சாரிகே நளின் மஹி குமார் | 2026.06.01 | கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 3, 4 [4(2)ஐ தவிர], 5, 6, 7, 8, 33, 39, 42, 43, 44 [44(6) ஐ தவிர], 45, 50, 52, 53, 54, 58 [58(2)(அ) உம் 58(5) உம் தவிர), 59, 68, 72 ஆகிய பிரிவுகளின் கீழான கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் சகல அதிகாரங்களும், கூட்டுறவுச் சங்க விதிகளின் 4, 11, 15, 16(ii), 18, 19, 20, 27, 32, 33, 35, 37, 39, 40, 41, 42, 43, 48, [49 49(xii) தவிர], 52, 53 ஆகிய விதிகளின் கீழான கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் சகல அதிகாரங்களும் |
| 2. முகம்மது காசீம் ஜலால்தீன் | 2026.06.01 | |
| 3. முகம்மத் இஸ்மாயில் முகம்மத் பரீட் | 2026.06.01 | |
| 4. உமர் லெப்பை முகம்மது ஜெஷீம் | 2026.06.01 | |

EOG 06 - 0204

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.